## இராமாபுரம் குடிநீர் அபிவிருத்தி திட்டம்

- இராமாபுரம் குடிநீர் வழங்கல் திட்டம், ரூ.32.54 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.31.43 கோடிக்கு தற்போது மறு ஒப்பந்தம் கோரப்பட்டது.

- **குடிநீர் அபிவிருத்தித் திட்டம் கீழ்கண்ட முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது.**
  - 59517 மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள்.
  - 3500 மீ. நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்படும் பணிகள்.
  - 6797 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள்.
  - 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், 1 கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டியும்,

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமையும் இடங்கள்:**

வெங்கடேஸ்வரா நகர் – 5 இலட்சம் லிட்டர்
எஸ்.ஆர்.எம். காலேஜ் – 25 இலட்சம் லிட்டர்
(பாரதி சாலை, இராமாபுரம்)

**கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி அமையும் இடம்:**
வெங்கடேஸ்வரா நகர் – 5 இலட்சம் லிட்டர்

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்:**

  ஒப்பந்த பணிகள் ரூ. 2442 இலட்சத்திற்கு 24 மாதத்தில் பணி முடிக்க M/s. GKC Vishwa Consortium 21.08.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 21.02.2014 அன்று தொடங்கப்பட்டு, 20.02.2016 அன்று முடிக்க உத்தேசிக்கப்பட்டது. ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் 10.11.2018 அன்று ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள மறு ஒப்பந்தம் கோரப்பட்டு ரூ. 2102.55 இலட்சத்திற்கு பணிஆணை M/s.Keyem Engineering Enterprises–க்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- **பணிகளின் தற்போதைய நிலை**

1) தற்போது 75 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.

2) இது வரை இத்திட்டத்திற்கு ரூ.30.20 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

3) அனைத்து பணிகளையும் 30.11.2022 க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4) இத்திட்டத்தின் மூலம் சுமார் 80,500 மக்கள் பயன் பெறுவார்கள்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in